# சங்ககால மருத நிலத் தொழில்களும் நிலவியல் பண்பாடும்

***தி.ஜெ. திவ்யதர்ஷினி***
தமிழ்த்துறை
பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383092

**முன்னுரை**

*உலகம் தோன்றிய காலம் முதல் மனித வாழ்க்கை இயற்கையோடு இயைந்ததாக அமைந்துள்ளது. மனிதன் வாழும் நிலமும் நிலம் சார்ந்த பொருட்களும் செய்யும் தொழிலுக்குக் காரணமாக அமைகின்றன. சங்க கால மக்கள் ஐவகை நிலங்களிலும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வந்தனர். மக்கள் இயற்கையோடு இணைந்து தொழில்களையும் மேற்கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் வேட்டைச் சமூக அமைப்பும் முல்லை நிலத்தில் கால்நடைச் சமூக அமைப்பும் மருத நிலத்தில் வேளாண் சமூக அமைப்பும் நெய்தல் நிலத்தில் வணிக சமூக அமைப்பும் நிலவி வந்தது.தொல்காப்பியம், மருத நிலத்தைத் ''தீம்புனல் உலகம்'' எனக் குறிப்பிடுகிறது. ஏனைய மரங்களைக் காட்டிலும் மருதமரங்கள் ஓங்கி உயர்ந்து சிறப்பாக விளங்கியமையாலேயே இந்த நிலப்பகுதிக்கு 'மருதம்' எனப் பெயர் பெற்றது என்பர் ஆய்வாளர்கள். இவற்றில் மருதநிலமும், அங்கு நிலவிய நிலவியல் பண்பாட்டு அமைப்பும் இங்கு ஆய்வுக்குரியதாகிறது. சங்க இலக்கியங்களில் நிலவியல் சார்ந்து அமையும் தொழில்களைப் பற்றியும் அவற்றில் மருதநிலத் தொழில்களை பற்றியும் மருத நிலப் பண்பாடும் பற்றி அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**தொல்காப்பியர் கூறிய நிலப்பகுப்பு**

*தொல்காப்பியர் நிலங்களின் இயல்பு மற்றும் தன்மைகளை அந்தந்த நிலத்தின் வழிபடு கடவுளர்களோடு சேர்ந்து விளக்குகிறார். இதனை,*

***''மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***வருணன் மேயை திருமண உலகமும்***
***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
***சொல்லிய முறையாய் சொல்லவும் படுமே''***
***(தொல். பொருள். 5)***

*என்ற நூற்பா விளக்குகின்றது. மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த பகுதி முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த பகுதி மருதம் என்றும் கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் என்றும் பகுத்துள்ளார் தொல்காப்பியர். இவற்றுள் பாலை நிலம் குறித்த முழுமையான விளக்கத்தை சிலப்பதிகாரம் தருகிறது. ''தமிழ்க்கவிஞரின் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் இடமளிக்கக்கூடிய வகையில் இந்த நிலவெளியில் மிகுந்த பன்முகத்தன்மை கிடைத்தது. சோழமண்டல, பாண்டிய மண்டல மணற்கடற்கரை உள்நோக்கி மெதுவாக மரங்களடர்ந்த பகுதியாக மாறி உயர்ந்து சென்று மேற்குத் தொடர்ச்சி மலையைச் சந்திக்குமாறு சென்றது. மேற்குத் தொடர்ச்சி மலை சற்றே பிரிந்து நீலகிரி, பழனி, ஆனைமலைப் பகுதிகள் ஆயிற்று. இங்கே தமிழ்க் கவிதைக்கு அடிப்படையான ஐந்நிலப் பகுப்பு ஏற்படக் காரணமான பன்முகத்தன்மை விளங்கியது'' (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், ப. 4) என்ற கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.*

*ஓர் இனத்தின் வாழ்க்கைமுறையும், நம்பிக்கைகளும், குணநலன்களும், பண்பாட்டுக் கூறுகளும் அந்த இனம் சார்ந்திடும் நிலத்தன்மை, தட்பவெட்ப நிலை ஆகியவற்றின்*

பின்னணியில்தான் அமையும் என குரோஸ் ஹோட்ஜ் (Grose Hodge) எனும் நிலவியல் அறிஞர் குறிப்பிடுவார். இது சங்ககால மருதநில மக்களின் நிலவியல் சார்ந்த பண்பாட்டுப் பதிவுகளுக்கும் முற்றிலும் பொருந்தும்.

## நிலவியலும் பண்பாடும்

ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. அது நிலவியலை சார்ந்து அமைவது ஆகும். சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் பண்பாடு வெளிப்படுத்தும். கலை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், இலக்கியங்கள், விழுமியங்கள் முதலியன அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என்று இருவகைகளாகப் பிரிக்கலாம். மக்கள் அவர்களின் தேவைகளுக்குச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வீட்டுப் பொருள்கள், உடைகள், வேளாண் நிலங்கள் போன்றவை பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. பொருள்சாராப் பண்பாட்டில் மக்களின் பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், சிந்தனைகள், இலக்கியங்கள், கலைகள், உணவு உண்ணும் முறை, வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்றவை இடம்பெறும்.

## மருதநிலத் தொழில் வகைகள்

ஐவகை நிலங்களில் மருத நிலம் நீர் வளமிக்க இடமாக இருப்பதினால் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர், முதலானோர் வாழும் இடமாக அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கீழ்க்கண்ட தொழில்களைச் செய்பவர்களாக அமைகின்றனர். அவையாவன,

- களைக்கட்டல்.
- களை பறித்தல்.
- நாற்று நடுதல்.
- ஏறு தழுவுதல்.
- நெல்லரித்தல்.
- கடாவிடல் போன்றவைகள் ஆகும்.

எனவே மருதநிலம் என்பது நன்கு திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட நிலமாகத் தோன்றுகிறது. அந்நிலத்தில் விளையும் பொருட்களையும் வேளாண்மை தொழிலையும் அடிப்படையாகக் கொண்டே மருதநில மக்களின் வாழ்வியல் அமைந்துள்ளது என்பதை, சங்க இலக்கியப் பகுதிகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். “மலைகள், ஆறுகள் போன்ற இயற்கை அமைப்புகள் மிகத் தெளிவாக எல்லைவகுக்கும் தென்னிந்திய நிலத்தோற்றத்தின் பௌதிக அமைப்பு, தென்னிந்தியாவின் சிறிய அரசுகள், இன்னும் சிறிய குறுநிலத் தலைவர்கள் ஆண்ட சிறு பகுதிகள் ஆகியவற்றிற்கு இடம் தந்தது. (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும். ப. 3) என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

## வேளாண்மைக் களம்

சங்க இலக்கியங்களில் வேளாண்மை நிலம் வன்புலம், மென்புலம் என்று இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில், நீர் சூழ்ந்த பகுதி, மென்புலம் என்று குறிப்பிடப்படுகின்றது. இதனை,

**நீர் தரும் மகளிர் குற்ற குவளையும்**<br>
**வன்புல கேளிருக்கு வருவிருந்து அயரும்**<br>
**மின்புல வைப்பின் நம் நாட்டுப் பொருந!**<br>
**மலையின் இடிந்து மாக்கடல் நோக்கி**<br>
**நிலவரை இழிதரும் பல்லாறு போலப்**

***(புறம்:42:16-20)***

என்ற பாடல் வாயிலாக அறியலாம். மருத நிலத்தில் வேளாண்மை செய்யும் மக்கள், நன்னிலத்தை களம், செய், தண்டலை, தண்ணடை, பனை, புலம், பழனம் ஆகிய பெயர்களைக் கொண்டு அழைத்துள்ளனர்.

## மருத நிலத்தின் பயிர் வகைகள்

நெல், கரும்பு போன்ற பயிர்கள் மருத நில மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு காரணிகளாக அமைகின்றன. இவை மட்டும்

*இன்றி வாழை, வெற்றிலைக்கொடி, உளுந்து போன்றவையும் மருத நிலத்தில் விளையும் பயிர்கள் ஆகும். மருத நிலத்தில் அதிகமாக நெல் விளைவிக்கப்பட்டதனை,*

***மலை வளம் தரூஉம் மாவண் தித்தன்***
***பிண்ட நெல்லின் உறந்தை ஆண்கண்***
***கலழிநிலை பெறாஅக் காவிரி நீந்தம்***

***(அகம்-6:4:5:6)***

*என்ற அகநானூற்றுப் பாடலின் வழி அறியலாம். மேலும், இந்நிலத்தில் கரும்பும் விளைந்தது என்பதை,*

***அரைக்கரும்பின் அறி நெல்லின் / இனக் களமர் இசை பெருக***

***(பொ.ஆ,193:194)***

***பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற் / கழனி யூரன் மார்ப / பழன மாகற்க வெனவேட் டோமே***

***(ஐங்-4 :4-6)***

*என்ற சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாக அறியலாம். மருத நிலத்தில் விளையும் பயிர்களை மற்ற நிலங்களில் விளைவித்தால் அவை விளையாது. இது மருத நிலத்தின் தனித்தன்மையாகக் கருதப்படுகிறது. அது மட்டுமின்றி, இதன் வாயிலாக மருதநில வாழ்வியலையும் மக்களின் பண்பாட்டையும் நாம் அறிந்து கொள்ளலாம்.*

**உணவுப் பழக்கம்**

*சங்க காலத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஆங்காங்கே விளையும் தானியம், காய், கிழங்கு, கீரை, கனி முதலியவற்றை அப்பகுதி மக்கள் உணவாகக் கொண்டனர். மருத நிலத்தில் செந்நெல்லும் வெண்ணெல்லும் மிகுதியாக விளைவிக்கப்பட்டன. அச்சோற்றை மிதவை என்று அழைத்தனர். அவரை, உளுந்து முதலான பருப்பு வகைகளுடன் நெய்யையும் கலந்து விருந்து படைக்கும் முறைமையை பல்வேறு மருதப் பாடல்கள் விளக்குகின்றன. புளிச்சோற்றில் பசுவின் வெண்ணெயை உருக்கி இட்டு உண்டனர் என்பதை*

***"உளுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை"***

***(அகம். 86)***

***"மைப்பு அறப் புழுங்கின் நெய்களி வெண்சோறு"***

***(அகம்.136)***

*ஆகிய பாடல்களின் தொடர்களால் பண்டைத் தமிழரின் உணவுப் பழக்கத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.*

**பண்பாடும் நிலவியலும்**

*பண்பாடு எனும் சொல் "பண்படு" என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது எனலாம். நல்ல பழக்க வழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் மனிதனைப் பண்பட்ட மனிதன் என்று கூறுவர். பண்பாடு என்பது பல்வேறு கூறுகளால் இணைக்கப்பெற்ற ஒழுங்கமைப்பு முறை ஆகும். கற்றுணர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் நடத்தை முறைகளின் தொகுப்பே பண்பாடு என மானிடவியலாளர்கள் கூறுவர். பண்பாட்டு நிலவியல் என்பது நிலவியல் என்னும் புலத்திற்குள் இடம்பெறும் உட்பிரிவுத்துறை ஆகும். அது பண்பாட்டு உற்பத்தி, அதற்கான விதிகள் ஆகியவற்றைப் பற்றிக் கவனம் செலுத்துவதோடு, வெளியை குறுக்கும் நெடுக்குமாக நிறுத்திக் காட்டுவதோடு அவற்றிற்கு இடையேயுள்ள உறவுகளையும் விளக்க முனைகிறது. பண்பாட்டு நிலவியல் கல்வி முக்கியமான பண்பாட்டு நடவடிக்கைக் கூறுகளாகப் பின்வருவனவற்றைக் கருதுகிறது என்ற அ. இராமசாமி அவர்களின் கருதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.* (https://ramasamy writings.blogspot.com/2015/03/blog& post 24.html)

**முடிவுரை**

*குறிப்பிட்ட நிலம் சார்ந்து வாழும் மக்கள், தாங்கள் வாழும் நிலம் சார்ந்த பழக்க வழக்கம், நம்பிக்கை, நடைமுறைகளை புதியதாக உருவாக்கிக் கொள்கின்றனர். அவை அந்த நிலத்தில் வாழும் பெரும்பாலான மக்களால் பின் பற்றப்படும் போது, புதிய பண்பாட்டுக் கூறுகளாக உருவாகின்றன. புதிய பண்பாட்டுக் கூறுகள் அந்த நிலம் / நிலவியல் சார்ந்த தனித்த அடையாளமாக நிலவியல் பண்பாடாக உருமாறுகிறது. நிலவியல் பண்பாட்டில் மக்கள் தாம் வாழும் வீடு, ஊர், நகரம், நாடு ஆகியவற்றை*

*நிரந்தரமான நிலவியல் கூறுகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இவற்றைஅடிப்படையாகக் கொண்டு அந்தந்த நிலத்து மக்களின் கலை, இலக்கிய, சமுக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் அமைகின்றன.*

**துணை நூற் பட்டியல்**


1. *இளம்பூரணனார் உரை, (2022), தொல்காப்பியம் - பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.*
2. *துரைசாமிப்பிள்ளை. ஔவை (2006), சங்க இலக்கியம் ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை.*
3. *துரைசாமிப்பிள்ளை.ஔவை (உரை), (2023), புறநானூறு (மூலமும் உரையும்), தீபம் வெளியீடு.*
4. *பூரணச்சந்திரன், க. (மொ), (2014), நிலஅமைப்பும் தமிழ்க் கவிதையும் (செவ்வியல்தமிழ்க்கவிதையில்இயற்கை பற்றியதோர் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.*
5. *முருகேசபாண்டியன், ந. (2016), மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை*
6. *ஜகந்நாதன் கி.வா, (1985), பொருநர் ஆற்றுப்படை விளக்கம், அமுதா நிலையம் லிமிடெட், சென்னை*